# 5,000 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் தானியங்கி முறையில் இயக்கப்படும்!

## அமைச்சர் இ. பெரியசாமி பதிலுரை... 4 ஆம் பக்கத் தொடர்ச்சி

361கோடி ரூபாய் நிதி செலவிடப்பட்டுள்ளது. POOLED ASSIGNED REVENUE மூலமாக தொடர்ந்து இத்தகைய பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம். அது குறித்துதான் உறுப்பினர்களும் பேசினார்கள். அந்தத் திட்டம் குறித்து நான் ஏற்கெனவே சொன்னதுதான்.

ஒரேயொரு COMPARISON மட்டும் சொல்லிவிடுகிறேன். இது 2006ல் ஆரம்பிக்கப்பட்ட திட்டம். நம்முடைய முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது, 2006 ஆம் ஆண்டில்தான் ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தை முதன்முதலாக ஆரம்பித்தோம். அத்திட்டத்தை நிறைவேற்றியதில் இந்திய அளவில் முதல்மாவட்டமாக வந்தது திண்டுக்கல் மாவட்டம்தான் என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்துகொள்கிறேன். தற்போது நம்முடைய முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் இத்திட்டம் சிறப்பாக வளர்ந்துள்ளது. கிராமங்களில் வேலைவாய்ப்பை மேலும் உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள்.

அதனடிப்படையில், 2006 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை 23,000 ஆக இருந்த அந்தக் குழுக்களின் (CLUSTERS) மொத்த எண்ணிக்கை தற்போது, 28,000 ஆக உயர்ந்துள்ளது. அதாவது, ஒரே ஆண்டில் 4,700 குழுக்கள் புதிதாக உருவாக்கப்பட்டு, மொத்தம் 41 கோடி வேலை நாட்களை உருவாக்கி, ஏறத்தாழ 11 ஆயிரம் கோடி ரூபாய் ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் இந்தத் திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்துகிறோம் என்பதால் இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்கள் அனைத்தும் நமது தமிழகத்தைப் பார்வையிட்டுச் செல்கின்றன. ஏனெனில், 3 மடங்கு மக்கள்தொகை உள்ள உத்தரப்பிரதேச மாநிலத்தில், அவர்களால் நிறைவேற்ற முடிய வில்லை. ஆனால், நமது மாநிலத்தில் 41 கோடி வேலை நாட்களை உறுதி செய்து, தற்போது சாதனை படைத்திருக்கின்ற அரசு நம்முடைய முதல்வர் அவர்களுடைய அரசு என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அவர்களுக்கான சம்பளத்தை நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் உயர்த்தினோம். பின்னர், மத்திய அரசும் உயர்த்தி விட்டது.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியாக 5 கோடி ரூபாய், 6 கோடி ரூபாய் வேண்டும் என்றெல்லாம் உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். (குறுக்கீடு) கேட்டால் கொடுக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவைக்கு வருகின்றபோது, உங்களுடைய கோரிக்கையை வையுங்கள். நிச்சயமாக அவருடன் கலந்தாலோசித்து, அதுசம்பந்தமாக முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது, கிராமங்களுக்கெல்லாம் ஒரு முக்கியமான செய்தியைச் சொல்கிறேன். வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் கேட்டார்கள். 5000 MINOR IRRIGATION TANKS, அதாவது, கிராமங்களில் இருக்கக்கூடிய MI TANKSக்கு வரக்கூடிய வரத்து வாய்க்கால்கள், குளங்கள் ஆகியவை இயந்திரங்கள் மூலமாக 500 கோடி ரூபாயில் சீரமைத்து, புனரமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோக இன்னும் ஏராளமான திட்டங்கள் இருக்கின்றன. நிச்சயமாக வரும். எதிர்பாருங்கள் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்தத் துறை மிகச் சிறப்பாக இயங்குவதற்கு எங்களுக்கு வழிகாட்டிய முதல்வர் தளபதியார் அவர்களுக்கு, என்னுடைய உயிரினும் மேலான தலைவர் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தை யும் தெரிவித்து, துறை தொடர்பான அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

### அறிவிப்புகள்

500 கிராம ஊராட்சிகளுக்கு ஊராட்சி மன்றங்களுக்காக இந்த ஆண்டு அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும். மறந்துவிடாதீர்கள் 500 ஊராட்சி. மொத்தம் 234 பேர் இருக்கிறார்கள். பார்த்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) உங்கள் ஊருக்கு இல்லை.

1.ஊராட்சி மன்றங்களுக்காக 500 கிராம ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.

ஊராட்சி மன்றங்களுக்கான கிராம ஊராட்சி அலுவலக கட்டடங்கள் மற்றும் கிராம செயலகங்கள் கடந்த மூன்றாண்டு களாக கட்டப்பட்டு வருகின்றது. நடப்பாண்டில், பழுதடைந்த நிலையில் உள்ள 500 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு நிதியுடன் ஒருங்கிணைந்து, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் தலா ரூ.30 இலட்சம் வீதம் மொத்தம், 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

2.புதிதாக 10 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் கட்டப்படும்.

ஊராட்சி ஒன்றியங்களில் பழுதடைந்த பழைய அலுவலகக் கட்டடங்களுக்கு பதிலாக ஆண்டுதோறும் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதுவரை, 290 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்கள் 728 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 2024-2025 ஆம் ஆண்டில் 10 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் தலா 6.00 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 60.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் கூறு நிதியில் கட்டப்படும்.

3.ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலுவலக வளாகம் புதுக்கோட்டை மாவட்டத்தில் கட்டப்படும்.

ஊரக வளர்ச்சி அலுவலகங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலுவலக வளாகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதுவரை ரூ.104.47 கோடி செலவில் 15 ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலுவலக வளாகங்கள் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 20242025 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலுவலக வளாகம் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியில் கட்டப்படும்.

4.ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, திட்ட இயக்குநர்களுக்கு ஐந்து முகாம் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள் புதிதாக கட்டப்படும்.

2024-2025 ஆம் ஆண்டில், திருவாரூர், மதுரை, இராமநாதபுரம் மற்றும் புதிதாக உருவாக்கப்பட்ட செங்கல்பட்டு மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் திட்ட இயக்குநர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடங்கள் தலா 2 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 10.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியின்கீழ் புதிதாக கட்டப்படும்.

5.ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிப் பணிகளைக் கண்காணிக்க 480 புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

ஊரகப் பகுதிகளில் நடைபெற்று வரும் பணிகளை தொடர்ந்து கண்காணித்திடவும், தரத்தினை உறுதி செய்யும் பொருட்டும் ஊரக வளர்ச்சித் துறைகள அலுவலர்களுக்கு ரூ.44 கோடி மதிப்பீட்டில் 480 புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

6.2,500 கிராம ஊராட்சிகளில் உள்ள மேய்க்கால் நிலங்களில் கசிவு நீர் குட்டைகள் மற்றும் மரம் நடுதல் போன்ற பணிகள் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், 2,500 கிராம ஊராட்சிகளில் உள்ள மேய்க்கால் நிலங்களைப் பாதுகாத்து, மேம்படுத்திடும் பொருட்டு கசிவுநீர் குட்டைகள் மற்றும் மரம் நடுதல் போன்ற பணிகள் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

அடுத்து, 5,000 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் தானியங்கி முறையில் AUTOMATIC ஆக CURRENT வரும்போதெல்லாம் ON ஆகி ஓடும். TANK நிரம்பிவிடும். TANKER FREE ஆக இருக்கலாம். இதையெல்லாம் நீங்கள் பேசும்போது சொன்னீர்கள் TANK OPERATORக்கு சம்பளம் போன்ற எல்லாவற்றையும் கூறினீர்கள். அதுபற்றி நம்முடைய துறையினுடைய ஆய்விலே இருக்கிறது. நிச்சயம் விரைவில் அதற்கு உரிய முடிவு எடுக்கப்படும். அது இதில் வராது நான் தனிப்பட்ட முறையில் சொல்கிறேன்.

7.2024-2025 ஆம் ஆண்டில் 15 வது மத்திய நிதிக்குழு மானியத்தின் வரையறுக்கப்பட்ட கூறு (குடிநீர் வழங்கல்) மற்றும் இதர நிதிகள்மூலம் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5,000 மேல் நிலை நீர் தேக்கத் தொட்டிகள், இணையம்மூலம் தானியங்கி ஆன்/ஆப் இயக்க அமைப்புகள் நிறு வப்படும்.

## ரூ.750 கோடி மதிப்பீட்டில் 500 ஊராட்சி அலுவலகங்கள்!

8.பத்து மலக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

கிராமப்புறங்களில் சுகாதாரமான முறையில் மலக்கழிவுகளை அகற்றும் நோக்கில் தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் 10 புதிய மலக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் (FAECAL SLUDGE TREATMENT PLANT) ரூ.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

9. ஊரகப் பகுதிகளில் 10 எரிவாயு தகன மேடைகள் கட்டப்படும்.

ஊரகப் பகுதிகளில் அனைத்து சமூகத்தினரும் பயன்பெறும் வகையிலும், சமத்துவம் மற்றும் மத நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கத்துடனும் 2024-2025 ஆம் ஆண்டில், 10 எரிவாயு தகன மேடைகள் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியின்கீழ் கட்டப்படும்.

அடுத்து, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் 1100 குழந்தை நேய வகுப்பறைகள் கட்டப்படும். ஏற்கெனவே பேசிவிட்டேன். இன்னும் கட்டுவது என்று ஆரம்பித்திருக்கிறோம்.

10. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் 1,100 குழந்தை நேய வகுப்பறைகள் கட்டப்படும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் குழந்தை நேய வகுப்பறைகள் ஊரக வளர்ச்சித் துறைமூலம் கட்டப்பட்டு வருகின்றன. 2024-2025 ஆம் ஆண்டில் ரூ.168 கோடி மதிப்பீட்டில் 1,100 புதிய குழந்தை நேய வகுப்பறைகள் கட்டப்படும்.

அடுத்து, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ரூ.60 கோடி செலவில் பழுது பார்க்கப்படும். நீங்கள் கேட்டீர்கள். ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் பழுது நீக்கம் செய்யவேண்டுமென்று கேட்டிருக்கிறார். பழுது பார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்படும். அதற்காக ரூ.60 கோடி ஒதுக்கியிருக்கிறோம்.

11. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ரூ.60 கோடி செலவில் பழுது பார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்படும்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் பெருமளவில் பழுது பார்க்கப்பட்டு வருகின்றன. 2024-2025 ஆம் ஆண்டிலும் அணைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பழுது பார்த்தல் மற்றும் புனரமைப்புப் பணிகள் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

12.ஊரகப் பகுதிகளில் 500 அரசுப் பள்ளிகளில் ரூ.100 கோடியில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ஊரகப் பகுதிகளில் உள்ள 500 அரசுப் பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர் கட்டும் பணி 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

அடுத்து, ஊரகப் பகுதிகளில் 500 சிறு பாலங்கள் மொத்தம் ரூ.140 கோடி செலவில் கட்டப்படும். சிறு பாலங்கள் எல்லாம் கட்டுகிறோம். MINOR BRIDGES.

13.ஊரகப் பகுதிகளில் 500 சிறு பாலங்கள் மொத்தம் ரூ.140 கோடி செலவில் கட்டப்படும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தவும், ஊரக சாலைகளில் குறுக்கே செல்லும் ஓடைகள் மற்றும் வடிகால்கள் மேலாக 500 சிறுபாலங்கள் ரூ.140 கோடி செலவில் கட்டப்படும்.

அடுத்து, ஊரகப் பகுதிகளில் முழு நேரம் இயங்கும் 500 நியாய விலைக் கடைகள் ரூ.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். நீங்கள் முதலில் MLA FUNDல் தான் கட்ட வேண்டும். தற்போது எங்கள் துறையின்மூலம் நாங்கள் கட்டிக் கொடுக்கிறோம்.

14. ஊரகப்பகுதிகளில் முழு நேரம் இயங்கும் 500 நியாய விலைக்கடைகள் ரூ.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், ஊரகப்பகுதிகளில் மக்கள் உணவு தானியப் பொருட்களை எளிதில் வழங்கும் பொருட்டு, முழு நேரம் இயங்கும் 500 நியாய விலை க்கடைகள், மொத்தம் ரூ.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

15. ஊரகப்பகுதிகளில் 5000 புதிய சிறு குளங்கள் ரூ.250 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

ஊரகப்பகுதிகளில் மழைநீரை சேகரித்து வேளாண் பணிகளை மேம்படுத்தவும், நிலத்தடிநீர் மட்டத்தினை உயர்த்திடவும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 5000 புதிய சிறு குளங்கள் மொத்தம் ரூ.250 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

சுத்தமான, சுகாதாரமான காற்றைச் சுவாசிப்பதற்காக எல்லா குளம் அமைக்கிறோம், வாய்க்கால்கள் வெட்டுகிறோம். ஆக, அனைத்துப் பணிகளும் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்றுக்கொண்டு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் படித்தேன்; சாலைகள்தான் கேட்டிருக்கிறார்கள், வீடுகள் கேட்டிருக்கிறார்கள். ஆனால், இந்த ஆண்டு கன்னியாகுமரியில் அந்த வருடமே முழு வீடுகளையும் கட்டிக்கொடுத்துவிடுவோம். நீங்கள் பட்டியலைக் கொடுங்கள். நாங்கள் அதிகாரிகளைச் சென்று எல்லாவற்றையும் பார்க்கச் சொல்லி, அந்த வீடுகள் 15 மாவட்டங்களில் ஒரு கணக்கெடுப்பின் படி, அனைத்து வீடுகளையும் முழுமையாக இந்த ஆண்டே கட்டி முடிக்கலாம் என்று கருதுகின்றோம்.

எனவே, அதுசம்பந்தமாக முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி நிச்சயமாக அதை நிறைவேற்றுவோம். மற்ற இடங்களிலும், குறிப்பாக கடலூரில் நிறைய குடிசைகள் இருக்கின்றன. அதனால் நம்முடைய செல்வப்பெருந்தகை அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே, நிறைய வீடுகள் கட்டிக்கொடுக்கலாம். அவர்கள் பசுமை வீடு எடுத்து கட்டாமல் போய்விட்டார்கள். இப்பொழுது நாம் கட்டிக்கொடுக்கிறோம். ஆக, அத்தனை வீடுகளும் கட்டித் தருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தொடர்ச்சியாக எடுக்கப்படும். இந்த ஆண்டு ஒரு இலட்சம் வீடுகள் உறுதியாக கட்டப்படும். அதிலே 15 மாவட்டங்கள் இந்தப் பணிகள் அடுத்த ஆண்டு கூட்டம் நடைபெறுகின்றபோது, அது முடிவுறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கி றேன்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறை வேற்றித் தர வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய ஊரக வளர்ச்சித் துறையில் எங்களுக்கு உறுதுணையாக இருந்து, மிகச் சிறப்பாகப் பணியாற்றிய எங்களுடைய செயலர் செந்தில்குமார், அவர்களுக்கும், அதேபோல இயக்குநர் பொன்னையா அவர்களுக்கும் மற்றும் நம்முடைய நிதித்துறை செயலர் உதயச்சந்திரன் அவர்களுக்கும் மற்றும் ஏனைய தலைமை நம்முடைய முதலமைச்சர் அவர்களின் செயலர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் இ.பெரியசாமி பதிலுரை வழங்கினார்.

---

### விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் அன்னியூர் சிவாவை ஆதரித்து

# உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்குச் சேகரிப்பு!

### டாக்டர் பொன்.கௌதம சிகாமணி தலைமையில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பிரச்சாரம்!

விழுப்புரம் ஜூன் 24-

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு இடைத் தேர்தல் அடுத்த மாதம் 10ஆம்தேதி நடைபெறுகிறது.

இதில் தி.மு.க. சார்பில் அன்னியூர் சிவா போட்டியிடுகிறார். இவருக்கு ஆதரவாக விக்கிரவாண்டி தெற்கு ஒன்றியத்தில் உள்ள பல்வேறு ஊராட்சிகளில் தி.மு.க.வினர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம்இரவு விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் கௌதம சிகாமணி தலைமையில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் செ.புதூர், செ. கொளப்பாக்கம், நகர் ஊராட்சிகளில் வாக்காளர்களை சந்தித்துஉதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டனர்.

வாக்குச் சேகரிப்பின் போது விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், மாவட்ட துணை செயலாளர்மரக்காணம் ரவிக்குமார்,மாவட்ட பொருளாளர் ரமணன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், ஒன்றிய செயலாளர்கள் வேம்பி ரவி, நெடுஞ்செழியன், அண்ணாதுரை, ராஜாராமன், மணிமாறன், செழியன், பழனி, ரவிச்சந்திரன் பச்சையப்பன் விஜயராகவன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன், செஞ்சி நகர செயலாளர் கார்த்திக், அனந்தபுரம் நகர செயலாளர் சம்பத்,முட்டத்தூர் ஒன்றிய கவுன்சிலர் கபிலன், செ.புதூர்ஊராட்சி மன்ற தலைவர் அந்தோணி,உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கறம்பக்குடி வடக்கு ஒன்றிய, நகர தி.மு.க. சார்பில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையிலும், கறம்பக்கு வடக்கு ஒன்றிய செயலாளர் வெ.முத்துக்கிருஷ்ணன் வரவேற்புரையிலும் கறம்பக்குடி வள்ளுவர் திடலில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றினார். நிகழ்வில் கழக வழக்கறிஞர் பிரிவு துணைச் செயலாளர் சூர்யா வெற்றிகொண்டான், மாவட்டத் துணைச் செயலாளர் பி. ராஜேஸ்வரி, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் தவ.பாஞ்சாலன், கந்தர்வக்கோட்டை தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.பரமசிவம், கரம்பக்குடி பேரூர் கழகச் செயலாளர், பேரூராட்சி தலைவர் உ.முருகேசன், கறம்பக்குடி ஒன்றிய குழுத் தலைவர் மாலா ராஜேந்திரதுரை, எம்.நைனாமுகமது, எம்.ஏ.லத்தீப், என்.ஆர். பரிமளம் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

---

### பீகாரில் மீண்டும் பாலம் இடிந்து விபத்து:

# ஒரே வாரத்தில் அடுத்தடுத்து 3 பாலங்கள் இடிந்ததால் பரபரப்பு!

பாட்னா, ஜூன் 25-

பீகார் மாநிலம் கிழக்கு சம்பாரன் மாவட்டத்தில் உள்ள மோதிஹாரி நகரில் கால்வாய் ஒன்றின் மீது புதிய பாலம் கட்டப்பட்டு வந்தது. அங்குள்ள அம்வா கிராமத்தை மாவட்டத்தின் பிற பகுதிகளுடன் இணைக்க ரூ.1½ கோடி செலவில் மாநில ஊரகப் பணித்துறையால் இந்த பாலம் கட்டப்பட்டு வந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை இந்த பாலம் திடீரென பயங்கர சத்தத்துடன் இடிந்து விழுந்தது. அதிர்ஷ்ட வசமாக இதில் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இந்த விபத்து குறித்து மாநில ஊரகப்பணித்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் தீபக் குமார் சிங் பத்திரிகையாளர்களிடம் கூறுகையில், "சம்பவத்திற்கான சரியான காரணம் இன்னும் தெரியவில்லை. இது தீவிரமான விவகாரம், துறை ரீதியான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. தவறு செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

முன்னதாக பீகாரின் சிவான் மாவட்டத்தில் உள்ள தரவுண்டா மற்றும் மகாராஜ்கஞ்ச் கிராமங்களை இணைக்கும் வகையில் கால்வாயின் மீது கட்டப்பட்டிருந்த 45 ஆண்டுகள் பழமையான பாலம் இடிந்து விழுந்தது. அதற்கு முன்பாக அராரியா மாவட்டத்தில் உள்ள குர்சா காந்தா மற்றும் சிக்டி பகுதிகளை இணைக்கும் வகையில் பக்ரா ஆற்றின் மீது கட்டப்பட்ட புதிய பாலம் கடந்த 18ந் தேதி திடீரென இடிந்து விழுந்தது.

ரூ.12 கோடி செலவில் மாநில அரசால் கட்டப்பட்ட பாலம் திறப்பு விழாவுக்கு முன்பே இடிந்து விழுந்தது.

ஒரே வாரத்தில் அடுத்தடுத்து 3 பாலங்கள் இடிந்து விழுந்தன. பீகாரில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த விபத்துகளில் உயிரிழப்புகள் ஏற்படவில்லை என்றாலும், பொதுப்பணிகளின் தரம் குறித்த கேள்விகள் எழுவதற்கு இவை வழிவகுத்துள்ளன.



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்துவிழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் கௌதம சிகாமணி தலைமையில் விக்கிரவாண்டி தெற்கு ஒன்றியத்தில் உள்ள நகர் ஊராட்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார்.உடன் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், விக்கிரவாண்டி தெற்கு ஒன்றிய செயலாளர் வேம்பி ரவி, மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன்உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.